அத்துவிதத் தீர்ப்பு.

சென்னை, வேப்பேரி, ஸ்ரீ ஆனந்தாசிரம
சாது மகா சங்கத்தின் வெளியீடு.

கணபதி வாசகசாலை,
92, காமாட்சிகோவில் தெரு
காஞ்சீபுரம்

ஆசிரியர்
வேத மொழிபெயர்ப்பாசிரியர்
காசிவாசி. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

1936

காபி ரைட்] [விலை அணா 2.

எவரெடி பிரஸ்,
சூளை, மதராஸ்.

உ

முன்னுரை.

வாதிகடங்களுக் கல்லான் மதங்களுக்
கோதார் வலியின்மையுந் தீபற
ஓதியுணர்ந் தோரென்றுந் தீபற.

(அவிரோத வுந்தியார்.)

ஈண்டு,

"சத்தியம் அத்துவிதம்" "பரமார்த்தமானது அத்துவிதமாம்" "அத்துவிதீயமாகிய பிரம்மம் ஒன்றே" "உள்ளது ஒன்றே, ஒன்றாந் தன்மையை யுணர்வானுக்குச் சோகம் ஏது? மோகம் ஏது?" "நான்காஞ் சிவம் அத்துவிதம்" "நாவினால் மண் குடமெனப்படுகின்றது மண்ணே உண்மை" "இவ்வனைத்தும் ஆன்ம வடிவம்" "பிரமமே இவ்வனைத்தும், என்றற்றொடக்கத்துப் பல்லாயிரம் சுருதி வாக்கியங்களும் அத்துவிதத்தைக் கருத்தாகக் கூறுகின்றன.

அஃதோடமையாமல், "ஈண்டு அற்பமும் இல்லை" "பலவற்றைப்பார்த்து மிருத்துவை யடைகின்றான்" "தனக்கன்னியமாய் ஒருபொருளுண் டென்றுணர்ந்தவன் பிரமத்தை யறிந்தவனலன்" "அஃதொன்றே நானா என்பதில்லை" "சிறிதும் பேதத்தைச் செய்து இரௌரவ நரகத்தை யடைகின்றான்" என்றற்றொடக்கத்து எண்ணிறந்த உபநிடத வாக்கியங்கள் துவைதத்தை மறுக்கும் வாயிலாக உலகம் பொய்யென்றும் அறிவுறுத்துகின்றன.

இக்கருத்தையே,

எங்குஞ் சிவமொழிய இல்லையவன் றன்னாணை, யங்கந் திரள் கருவி யாணவமாம்—பொங்குமிருள்மை செய்த மாமா

யை மாயை வினைமற்றனைத்தும், பொய் பொய் பொய் பொய் எனவும்,

" அத்துவித வத்துவைச் சொற்பிரகாசத்தனியை " எனவும்,

"சுருதியினுளேகமே வாத்துவிதமென்னுஞ் சொற்கிடையுளேக மெனுஞ் சொல்லதனுக் கயிக்கம், அரிதிலுண ரேவ வெனு மிடைச்சொற்குத் தேற்றம், அத்துவித மெனு மொழிக்குத் துவித விலக்காக கருது பொருள் வருதலினல்" எனவும்,

துவிதம் இரண்டாகும் அத்துவிதம் ஒன்றாகும்
துவிதமயல் கெட்டோய் துணி. எனவும்,
அத்துவிதத்திற் கருத்தம்பல வென்னுஞ்
சிற்றறிவு கொண்டு சிலகீழ், எனவும்,
ஊனு யுயி ரானுயுட லானு யுலகானுய், எனவும்,
" தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை " எனவும்,
' பேதங்களனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனை '
எனவும்,

" இந்திரசாலங்கனவு கானலினீ ரெனவுலகம் "
" பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே " எனவும்,

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனூர் வானமை கயிற்றிற்பாம்பு மலடிசேய் முயலின் கோடு, பீனமாந் தறிபுமானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே, எனவும்,

மற்றும் பல்வகையாணும் தமிழ் நூல்களும் இனிது விளக்குகின்றன.

இவற்றின் கருத்தை யுணராதார், மயங்கிக் கருமகாண்டத்தையே கடைப்பிடித்து, காமிகளாய் சுவர்க்கம் வைகுண்ட முதலிய போகங்களில் வேட்கையுடையராய் பல்வகைக் கரு

மங்களை மேற்கொண்ட பல பல இனியவார்த்தைகளைக் கூறி உலகையும் மோகிக்கச்செய்வர். இதன் விரிவு கீதையிற் காணற்பாலது.

வேதமே, முக்குண விஷயங்கட்கு உட்பட்டதாமெனின், இவர்கள் எவ்வாறு குணாதீதமாகியதும் மனோதீதமாகியதுமாயுள்ள அத்துவிதத்தை யறிவார் ?

மற்றும், " சத ஜன்மகோடி புண்யைர்வினு ந லப்யதே " என்றபடி, பல்லாயிரம் பிறப்புக்களிற்செய்து வந்த புண்ணியங்களின் பலன்களால் மனத்தூய்மை மிகுந்தவிடத்து நிகழ்வது அத்துவிதமாமாதலின் ' பும்சாம் அத்துவித வாஸனு ' என்றதால் அத்துவித வாசனைகூட துவைதிகளான அவைதிகர்களுக்கு வாராதென்பது திண்ணம்.

உண்மையில், வேதாந்தப் பிரக்கிரியைகளிலும், தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களால் இலக்கணு விருத்தியாலும் அகண்டார்த்தம் நிகழ்வதன்று. எனெனின்? ' கங்கையிற் கோஷம், என்பதில், சக்கிய சம்பந்தத்தையுடைய, மீன், பாசி, தீர முதலியவைகளுள், வக்தாவின் கருத்து தீரத்தின் கண்ணேயேயுளது ஏனையவற்றில் இல்லை, என்று கொள்வதற்கு நியாமகம் யாது ? சக்கிய சம்பந்தம் இலக்கணையெனின், மீன், பாசி, தீரம், என்னும் மூன்றுங் கொள்ளத் தக்கனவன்றோ, ஆயினும், நுண்ணறிவாளனுக்குத் தீரமே கருத்தென்று தோன்றுவதுபோல், மனத்தூய்மை மிக்குடையானுக்கே அபேதத்திற் கருத்தெனல் நிகழுமாதலின் மனத்தூய்மையே சிறந்த காரணமெனல் வேண்டும். அம்மனத்தூய்மை மிகில், துயின்றோனுக்கு அறிவுறுத்திய மொழி, சத்தி, இலக்கணை என்பது முதலான சம்பந்தமின்றி மொழியின் பொருளை யுணர்த்துவித்தல் போன்று அகண்டப் பொருளை யறிவுறுத்தும். இதன் விரிவு வார்த்திகத்திற் காணற்பாலது.

இத்தகைய அத்துவிதம் வாக்குமனதிற்கு எட்டாததா மாதலின். அளவை கொண்டு மனத்தால் குற்றங்கூறல் தன் முகத்தில் எச்சிலையுமிழ்தல் போலாம், அங்ஙனமாயினும், பிறர் மதங்கொண்டு வினாவியதற்கு விடைகூறி, கனாவென்னு முலகில் களிக்கும் மயக்கமாறி, தனா தெனு மொரு அத்துவித நிலையிலேறி இன்பக்கடலாக ஆக்குவதன்பொருட்டு எழுந்தது இந்நூல்.

இந்நூல், யான், சென்னை ஆனந்தாசிரமம் 27வது வருஷப் பூர்த்தி விழாவில் ஆற்றிய அத்துவிதம் என்னும் விடயத்தைப் பற்றிய சொற்பொழிவைத் தொகுத்து எழுதியது.

முன்னுரை முற்றும்.

உ.

ஓம் தத் ஸத்

அத்துவிதத் தீர்ப்பு

நூல்.

அருளாலே தம்மை யறிந்தருளா யந்தப்
பரிபூரணமே பரையாய்ப்—பரை யொழிவில்
ஆனந்தா தீதமாம் அத்துவித சித்தாந்தம்
மோனம் வேதாந்த முடிவு.

சத்தியம் அத்துவிதம், என்பதனால் நிகழும் அத்துவிதமானது, நிறுவுதற்கும், மறுத்தற்கும் கட்டுப்படாததும், சமயக்கொள்கையைச் சாராது தனித்து நின்ற சமயாதீதப் பழம்பொருளும், மறைமுடிகளின் வாக்கியங்களால் மௌனமா யுணர்த்தப்படுவதும், ஞானவரம்பாகிய மோனநிலையாய் நிற்கும் இயற்கைத்தா மென்பது யாவரும் உடன்படற்பாலதாம்.

துவைதம் பொய், என்பதனாற் றோன்றும் துவைதம், மறுத்தற்கும், நிறுவுதற்கும் உரியதும், சமையக்கொள்கைகளுள் ஒன்றென்பதும், மறைமுடிகளால் நேரே யுணர்த்தப் படுவதும், வாய்ப்பேச்சின் வரம்பையையே யுடையதென்பதும் யாவரும் உடன்படற்பாலதே.

மற்றும், பெரும்பான்மை வேதமுதலான நூல்களானும், சமயங்களை நிறுவிய ஆசிரியர்களானும், மற்றெல்லாக் கொள்கைகளானும் எடுத்துப் பாராட்டுவது துவைதமேயாம். என்னை? வழக்கிற்குரிய துவைதத்தில் ஐயப்பாடு முதலியன இன்மையானும், துவைதமின்றி வழக்கு நிகழாமையானு மென்க.

வழக்கிற்கு உரித்தானமை மாத்திரத்தானே அது உண்மையேயா மென்பாரை, கிளிஞ்சில் வெள்ளியால் இல்லமமைத்து, கானனீரால் உணவு சமைத்து, கனாவூரில் உண்பித்து, கந்தருவ நகரத்திற்கு மறக்கடவுள் அனுப்புவாராக.

மற்றும், அவர், கிளிஞ்சில் வெள்ளியை விடுத்துப் பொருடேடுதலும், கனாப்பெண்டிரை யொதுக்கி மணப்பெண்டிரைக் கொள்ளுதலும், கனாவிலுண்ணலைக் கடந்து வயிறுவளர்க்க உலகை மயக்கலும் பயனற்றன வன்றோ?

துவைதி—அற்றேல், சங்கராசாரியர் முதலானோர், அத்துவிதத்தை நிறுவினவர் என்பதும், கண்டன கண்டகாத்தியம், அத்துவித சித்திமுதலான நூல்கள் அத்துவிதத்தைக் கூறுகின்றன வென்பதும், உபநிடதங்கள் அத்துவிதத்தைப் போதிக்கின்றனவென்பதும் பொருந்துமாலோ வெனின்?

அத்துவிதி—மதப்பேய்பிடித்து இதத்தாரைப் பகைத்து, மதத்தாரை வெறுத்து, நிதம்பிறரைப் பழித்து பவக்கடலுள் மூழ்கினையேயன்றி அக்கருத்தை நீ உள்ளவாறுணர்ந்திலை.

துவைதி—அற்றேல், அத்துவிதி என்றல் முதலியவற்றின் கருத்தென்னையோ வெனின்?

அத்துவிதி—கூறுதும்—துவிதம் சத்தியம் என்பாரை மறுத்தலால் ‘அத்துவிதி’ எனவும், தத் (அது) த்வம் (நீ) அஸி (ஆகின்றாய்) என்பதனால், “யான் அது வாயிருக்கிலேன்” என்பாரை மறுத்தலால் அபேதவாதி யெனவும், உலகு சத்தியமெனினும் பொருந்தாது, அசத்தியமெனினும் பொருந்தாது என மறுத்தலால் அநிருவசனக்கியாதி எனவும், பிறமதத்தர் பெயரிட்டு வழங்கிவருகின்றனரேயன்றி, நான் அவைதிகத் துவைதி’, என்று நீ பட்டங்கட்டிக் கொள்வதுபோல் நான் பட்டங்கட்டிக் கொள்ளவில்லை. மற்றும் பலவும் இவ்வாறே உயத்துணரற்பாலன.

துவைதி—அற்றேலஃதாகுக, அத்துவிதம் மறைமுடிமொழிகளால் எடுத்து நேரே கூறாமையின் அவைதிக மென்பதில் ஐயப்பாடு என்னை?

அத்துவிதி—அற்றேல், அவைதிகத் துவைதியே! நீ, “அன்னமயமான்மா, பிராணமயமான்மா’, என்றற் றொடக்கத்து மறைமுடி யுரைகளால் நேரே கூறப்பட்ட தேகான்ம நிலை முதலியவற்றை க்கைக் கொண்ட உலகாயதன் என்பதில் ஐயமுண்டோ?

மற்றும், அத்துவிதம் அவைதிக மென்று கொண்ட உலகாயதத் துவைதியாகிய நீ, வைதிக மென்பதற்குள் அடங்காது நின்ற அத்துவிதத்தை வேதவாக்கியங்கள் முதலான பிரமாணத்தால் மறுத்தற்கெழுந்த நினதுமதி மயக்கமதியன்றோ? ‘மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதது’ என்ற மறை மொழியையுங்கடந்து அப்பிரமேயம் என்பதையும் மறந்து அவற்றால் மறுக்கப்புகுந்த நீ வேதபாகிய னல்லனோ? ‘மனதால் காணத்தக்கது’ என்பதும் மறைப்பு நீக்கமாத்திரமேயன்றி விடயமல்ல வென்பதை மறைப்பொழித்த விளக்கின்பாற் காணக்கிடக்க வில்லையோ? சங்கராசாரியர் கொண்ட அத்துவிதத்தில் துவைதமே கொள்ளத் தக்கது என்று வலிந்து பொருள் கொள்ளும் பேதமை மதியோய்! நீ சங்கராசரியர் சண்மதத்தாபகர் என்று உலகம் முழங்குகின்றதை அறிந்திலை போலும். இனி அர்ஷமிசிரரைச் சரணடைந்து உய்வாயாக.

மற்றும், அரைத்த மாவையே அரைக்கும் அவைதிகத் துவைதியே! நீ, “அக்கினிஷ்டோமம் பசுமாலபேத” என்றற் றொடக்கத்து விதிவாக்கியங்களில் வேள்விகளில் பசுக்களை (ஆட்டுக்கடாக்களை)க்கொன்று வபை என்னும் ஒருவகைச் சவ்வை எடுத்து ஆகுதி செய்யும்படி விதித்திருக்கவும், ஆட்டுக்கடா இன்ன இயல்புகளை யுடையதாக இருத்தல்வேண்டும்

என்று கூறியிருக்கவும், வேதத்திற் கூறாததும், அவைதிகமுமாகிய மாப்பசுவைச் செய்து தீப்புகையை யோம்பும் அவைதிகன் நீயன்றோ? வேதபாகியனும் நீயலனோ? வேதவிதியைக்கடந்து நடத்தும் நாத்திகன் நீயா? மற்றையனா? வேதத்திற்குப் புறம்பானோய்! நீ மாறுபாடுசெய்து கொண்டதுந் தவிர மறைமுடிகளின் கருத்துக்கொண் டொளிருகின்றதும் நூலனைத்தினும் புதைந்து கிடப்பதுமாகிய அத்துவிதமென்னும் மறைமுடியின் சிரோமணியை அவைதிகம் என்றால் நினக்குப் பித்தலாது வேறென்னை?

விரிப்பதிலென், "சிறிது பேதத்தைச் செய்து இரௌரவ நரகத்தை யடைகின்றான்" என்ற சுருதிப்படி உனக்கு நாகமேயொழிய வேறில்லை யென்பது திண்ணம் இனி நீ எடுத்துக்கொண்டதின் மேற்செல்வாயாக.

துவைதி—உலகனைத்தையும் விஞ்ஞான மயமெனக்கொள்வதனால் அத்விதியாகிய நீ பௌத்தமதத்தைத் தழுவியனலனோ? உண்மை உலகஞ் சத்தியமென்னும் உலகாயதனை நீ வழுவிய விடத்து யான் பௌத்தனாயிருத்தல் சிறப்புடைத்தேயாம். புத்தாயநமః என்பது போன்று புத்தத் தன்மை தத்துவ உணர்ச்சியை மேற்கொண்டதே யன்றி உன்னைப்போல் அறியாமையையே மேற்கொண்டதன்று.

மற்றும், பௌத்தமதத்தில் விஞ்ஞான முதலான அனைத்தும் கணப்போதிருப்பனவா மெனக் கொள்ளப்பட்டிருத்தலும், வேதாந்த மதத்தில் விஞ்ஞானம் நித்தியமாகிய அத்துவிதப்பொருளா மெனக் கொள்ளப்பட்டிருத்தலும் வெளிப்படையாயிருக்க, இத்துணைப் பேதத்தை இனிது உணராது கண்டதே காட்சியெனவும் கொண்டதேகோல மெனவுங் கொள்ளுகின்ற உலகாய தமதத்தின் சீடனாய் நீ இவ்வண்ணம் வினவியது நினது மதியின் களங்கத்தை உலகறிய விளக்குகின்றது என்பதை உய்த்துணர்ந்தடங்குதி.

துவைதி—நீ, பிரமாணம் பிரமேயம் முதலானவற்றை அநிருவசன மென்னும் மித்தையாகத் துணிந்திருக்கின்றனை யாதலின் உன்னுடன் வாதாடல் யாது பயக்கும்?

அத்துவிதி—அவைதிகத் துவைதியே! நீ மதிமயக்கமுற்றனைபோலும்? என்னை? உலகாயதன், மாத்திமிகன் முதலானோர்களுடன் நினது மதப்பெரியாரின் விவாதம் விரிவாய் நிகழக்காணப் படுதலின் அஃதெவ்வாறுயதாம்? இன்றேல் நாத்திகரை மறுத்தற் கெழுந்தது பயனற்றதா மன்றோ?

மற்றும், வெற்றி, தோல்விகளுக்கும், பிரமாண முதலியவற்றை உண்மையெனக் கொள்ளல் காரணமன்று. மற்றோ, உண்மை யேதுக்களும், பொய்மை யேதுக்களுமே காரணங்கள் என்பதை யுணர்வாயாக. அற்றியும், அருணகிரியார் போன்றுள்ள அரிஷமிசிரரிடஞ் சென்று காதையறுத்துக் கொள்ளாது தப்பித்துக் கொள்ளுதி.

துவைதி—இத்தன்மைய விதண்டை வாதத்தில் யாது பயன்? மறைமுடி யுரைகளால் கருத்தால் உணர்த்தப்படுவதும், காட்சி முதலான பிரமாணங்கட்கு எட்டாததும், வாக்கு மனங்களைக் கடந்ததும், புறச்சமயத்தவர்க்கு இருள் போன்றிருப்பதும், அகச்சமயத்தவர்களுக்கு இரவிபோன்றொளிர்வதும், பூத சன்மங்கள் கோடிகளைப் புநிதமாக்குவதும், இனிப்பிறவா முடிவான பிறப்பில் எளிதிற்றோன்றுவதும், துயின்றார்க்குரைத்த உரையைப் போன்று சக்தி இலக்கணை முதலான சார்புகளைவிடுத்து தத்துவமசி மாவாக்கியத்தால் மனத்தூய்மை மிக்குடையாருக்கு, தானே நிகழ்வதுமாகிய உனது அத்துவிதத்தில் பிரமாணம் யாது? என்னும் வினவிற்கு விடை கூறுவாயாக.

ஈண்டு, பிரமாண மின்றெனில், அத்துவிதம் பெறப்படாத தாம்; உண்டெனில், அத்துவிதமெனல் கேடுறும் என்பது துவைதியின் உட்கிடை.

அத்துவிதி—அன்ப! நீ வினவியது மிக இனியதாம். அங்ஙனமாயினும் நீ அவைதிகத் துவைதியாதலினல் நீ இதை வினவுவதற்கு உரியனல்லை. உரியனெனினும், விடையால் நீ பெறும் பயன் யாது? விடையை யுணர்தலும், மனத்தூய்மை யற்ற நினக்கு முடியாததேயாம்.

அற்ருகலினன்றே கண்ணபிரானும், 'கேட்டும் இதை எவரும் வுணர்ந்திலர்' என்றருளினர்.

துவைதி—யான் இத்தகைய வினவிற்கு உரியனல்லன் என்றல் எவ்வாறு?

அத்துவிதி—அஃதாமாறு தெரிக்குதும்:—

வேதாந்தத்திற்கு முரண்பட்ட துவைதியே! நீ, வினவிய வினு, ஆசங்கைக்கும் பொதுப்பட்டதா மாதலினுனும், வினவில் வினவுதல் சாதியுத்தரம் என்னும் தருக்கவகைகளுள் ஒன்ருமாதலானும், வைதண்டிகத்தால் (விதண்டாவாதத்தால்) பிறர்மதத்தை மறுப்பதே சிறப்பெனக் கொண்டு நியதிகளை யும் வாயிலாக சேடமாய், நிற்பதே அத்துவித மாதலானும், எமக்கு நிறுவற்பாலது ஒன்றுமில்லை யெனக் கூறியுள்ளேம் ஆதலானும் நினது வினுவின்கண் சில வினவுதும்.

அதாவது, அத்துவிதம் யாது? என்பது நினது வினு வன்று; மற்ருே, "அத்துவிதத்தில் யாது பிரமாணம்?" என் பதன்ருே?

இவ்வினு எத்தன்மைத் தெனின்? பொதுவகையாற் புலப்படுவதும், சிறப்பு வகையாற் புலப்படாததுமாகிய ஒரு பொருள் வினவற்பாலது என்னுங் கருத்தை யுள்ளடக்கி நிற் பதும், 'அத்துவிதம்' என்னும் பொருளை விடயஞ் செய்வ் தாய சிறப்பினுல் நியமிக்கப் பெற்றதுமாம். இவ்வாற்ருல் நீ எவ்வாற்ருலேனும் எனக்கு அத்துவிதம் புலப்படுகின் றது என்பது கொள்ளற்பாற்று; இன்றெனில், வினுவே பொருத்தமுடையதன் றெனல்வரும், எனெனின்? குடமுத

லான பொருள்களிடத்து நினக்கும் பிரமாணம் துணியப் பெற்றிருத்தலின் பிரமாணம்யாது? என்னும் இத்துணைப் பொது வினு நினக்கியைந்த தன்ருமாதலின் என்க.

இதனுல், பிரமாணத்தின் புலப்பாட்டைமாத்திரங் கொ ண்டு இத்தகைய வினுப் பொருந்துமிடத்து வினவிற்கு விடய மாகாத அத்துவிதியத்தின் புலப்பாட்டைப்பற்றி இப்போது என்னை? என்று நீ தப்பித்துக்கொள்ளவும் மாட்டாதவனு யினை யென்றுணருதி.

துவைதி—இப்போது இங்ஙனம் வரையறுத்துக் கூறல் எற்றுக்கெனின்?

அத்துவிதி—வினுவென்பது வாக்கின் வழக்கு விசேட மாமாதலினுனும், வழக்கெனலும், தன்னைப் பயக்கும் விடயத் தின் நியதத்தாலமைவதா மாதலானு மென்க.

ஈண்டு, வினுச்சொல், தனது விடயத்துடன் கூடியே நிக ழும், பிரமாணமாதலின், குடத்தின் கண்ணுள்ள பிரமாணத் தைப் போலும், என்னும் அநுமான அளவையும் பெறப்பட் டமை காண்க.

இதனுனே, பிரமாணம், ஒருவிடயத் தோடே யெழுவ தன்றி, வினு வென்பதும் ஒருவிடயத்தோடே நிகழ்வதா மெனல் யாங்ஙனம்? என்னும் ஆசங்கையும் ஒழிந்துபோனமை கொள்ளக் கிடக்கின்றது.

எதனுலெனின்? வினுவென்பதும், தன்னைப்பயக்கும் உணர்ச்சிக்கு விடயமாதலினுல் நியதமுடையதாம், வியவகார மாயுள்ள தன்மையால், ஆவைக்கொணருதி என்பது முதலான வழக்குகளைப் போலும், என்னும் அநுமானமும் பிரமாண மாயினமையா லென்க.

துவைதி—அற்றேலஃதாகுக. வினுவானது விவகாரமா யிருக்குக, தன்னைப்பயக்கும் உணர்ச்சியின் விடயத்தால் நிய தப்படா தொழிக. இதனுற்படு மிழுக்கு என்னை யெனின்?

அத்துவிதி, அற்றன்று, மாறுகூறின், வழக்குகட்குள்ள வேற்றுமைகளில் விடயநியதமே காரணமாதலன்றி வேறொரு காரணமு மின்மையின் வழக்குகளனைத்தும், இது, இதைப்பற்றிய வழக்கு, என்னும் பகுப்பற்றுக் கலப்புறுவனவா மென்க.

இதனால், நுதலிப்போந்த பொருள் யாதெனின்? அத்துவிதம், துவைதியாகிய நினக்குப்புலபடா தொழியில் இத்தகைய வினாவே முழுதும் பொருந்தாததா மென்பது திரண்ட பொருள்.

துவைதி—அற்றேல், எனக்கு அத்துவிதம் புலப்பட்டவிடத்து இவ்வினா வெழுந்தது, இதிற்படு மிழுக்கென்னை?

அத்துவிதி, அங்ஙனமாயின், அத்தகைய அத்துவித நிகழ்ச்சி (ஞானம்,) உண்மை ஞானமெனின்? பிரமை யென்னும் உண்மை ஞானத்தின் கரணமே பிரமாண மெனப்படுதலின் அவ்வத்துவித வுணர்ச்சியின் கரணமாகிய பிரமாணம், முன்னமே நினக்குக் கிடைத்திருக்கத் தக்கது. ஆதலின் அதுவே அத்துவிதத்தில் பிரமாணமென நீயும் உடன்பட்டனை யல்லவா? மறித்தும் அதையே வினாவுதல் எற்றுக்கு?

ஈண்டு, ஞானம், உணர்வு, நிகழ்ச்சி, தோற்றம் என்பன ஒரு பொருட்கிளவிகள். ஆதலின், அத்துவித விடயஞான மானது, மெய்ஞானத்திற்கும், பொய்ஞானத்திற்கும் பொதுப்பட்டதா மெனினும் இப்போது நினக்குண்டாகிய ஞானம் உண்மை ஞானமென்று நீயே உடன்படுதலின். அத்தகைய மெய்யுணர்வு, இறைவனொழிந்த ஏனையோர்க்குண்டாகில் அது கருவியை யுடையதாகவே யிருத்தல் வேண்டுமென்பது துணிபாதலின், அக்கருவியே பிரமாணமென யாண்டும் வழங்கப்பெறுதலின், அத்துவிதத்தில், பொதுவாகவே நம்மிருவருக்கும் பிரமாணம் பெறப்பபட்டிருக்கு மிடத்து வினாவே வேண்டாமென்பது கருத்து.

இதனால், துவைதிக்கு உண்டாகிய அத்துவிதவுணர்வு உண்மை ஞானமாம் (பிரமை) என்னும் பட்சத்தில், துவைதியின் வினா, பிரமாணப் பொதுவைப்பற்றி யெழுந்தது என்னுங் கூற்று மறுக்கப்பட்டமை காண்க.

துவைதி—அற்றேல், சிறப்புவகையால் பொருளைப்பற்றி யெழுந்தது எனது வினா, மறுத்தல் எங்ஙனம்?

அத்துவிதி—துவைதமதத்தோய்; பொதுவகையிற் பிரமாணம் பெறப்பட்டிருப்பினும், சிறப்புவகையை மேற்கொண்டெழுந்தது நினது வினாவெனினும் பொருந்தாது, ஏனெனின்? பொதுவகையில் பிரமானம் பெறப்பட்டுழியே அத்துவிதமும் பெறப்பட்டதென உடன்படல் வேண்டும்; அஃது பெறப்பட்ட விடத்து, சிறப்புவகை பற்றி நீ வினாவுதல், காக்கையின் பல்லைக் கண்டுபிடிக்க முயன்ற தொக்கும். ஆதலின் என்க.

இதனானே, அத்துவிதமானது, பொதுவகை, சிறப்புவகை என்பது முதலான விகற்பங்களுக்குப் புறம்பு பட்டதாமாதலின், பொதுவாய், பிரமாணம் என்பது சித்தித்தபோதே அத்து விதமும் ஒருங்கே பெறப்பட்டதா மாதலின் மறித்தும் அதன் சித்தியில் பிரமாணத்தைச் சிறப்புவகையாக வினாவுதல் பயனற்றதெனத் துணியப்பட்டமை காணக்கிடக்கின்றது.

இது துவைதிக்கு, அத்துவித வுணர்வு மெய்யாகத் தோன்றியதென்னும் பட்சத்தில் சிறப்புவகையில் பிரமாணத்தையுணருமாறு எழுந்தது எனது வினா, என்னும் துவைதியின் விகற்பக் கூறும் மறுக்கப்பட்டதாம்.

துவைதி—அற்றேலஃதாகுக. வினாவின் விடயத்தைப் பற்றி எழுந்ததன்று எனதுவினா, மற்றே, சிறப்பு வகையால் பிரமாணத்தையே மேற்கொண்டெழுந்தது நீ கூறிய குற்றம் யாண்டு?

அத்துவிதி—அங்ஙனமாயினும், பிரமாணமானது வடிவ மாத்திரத்தானே புருடார்த்த மன்மையின் அத்தகைய வினா யாது பயக்கும்?

மற்றும், பொதுவகையாய்ப் பிரமாணம் பெறப்பட்டுழியே அது பிரமாணத்தின் சிறப்பையும் ஆசங்கித்துக் கொண்டு வருமாதலின் சிறப்புவகை பெறற்பொருட்டு வினாவுதல் வேண்டற்பாலதன்று.

இதனால், பொது என்பது சிறப்பின் வயத்ததாமாதலின். அதாவது, பொதுத்தன்மை என்னும் வழக்கு சிறப்புத் தன்மையின் உணர்ச்சியின்றி நிகழாததாமாதலின், சிறப்பு என்பது இன்றெனிலோ, பொருளானது தன்மையேயற்றதாய் சூன்யம் போலாய் விடும், ஆதலின் பொது என்றதனானே சிறப்பும் ஆசங்கைபற்றி, தானே பெறப்படுதலின் சிறப்பை மாத்திரங்குறித்து வினாவுதல் எற்றுக்கு? என்பது கருத்தெனக் கொள்ளக்கிடக்கின்றமை காண்க.

இது, துவைதிக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சி மெய்யெனக் கொண்டதிலே, சிறப்புவகையால் பிரமாணத்தைப் பற்றியது எனது வினா, என்னும் துவைதியின் கூற்றும் மறுக்கப்பட்டமை காண்க.

துவைதி—அற்றன்று, எனது வினாவின் பொருள் அஃதன்று; மற்றோ, அத்துவிதத்தில் நீ கூறப்படுகின்ற பிரமாணங்களுள் எது குற்றமிலாது பிரமாணம்? என்னும் பொருளையே மேற்கொண்டதாமாதலின் நீ கூறிய குற்றத்திற் கிடமெனல் யாங்ஙனம்?

அத்துவிதி—அங்ஙனங் கொள்ளினும், காண்டல் முதலான பிரமாணங்கள் முழுதுமே குற்றமுடையவைகள் எனப் புலப்படுகின்றன என்பையேல். வேறோராற்றை ஆசங்கித்துக் கொண்டேனும் அதன்பால் பொது என்பது முடிவை யுடை

தல் வேண்டும். இன்றெனிலோ, பொது என்னும் வழக்கே முழுதும் ஒழிந்துவிடுமென்க.

ஈண்டு, காண்டலளவை (பிரத்தியட்சப் பிரமாணம்) சம்பந்தங்களை அவாவி நிற்பதாமாதலின் இந்தியங்கட் கெட்டாத அத்துவிதீயத்தின்கண் பிரத்தியட்சம் பிரமாணமன்று.

அங்ஙனமே, கருதலளவையும், உடனிகழ்ச்சியையும், (வியாத்தியையும்) எடுத்துக்காட்டையும் (திட்டாந்தத்தையும்) அவாவிநிற்றலின், இவைகளைக்கடந்து நிற்கும் அத்துவிதத்தில் பிரமாணமன்று.

உவமையும், ஒற்றுமையாகிய விடயத்தைப்பற்றி நிற்பதாமாதலின் அஃது கழிந்துள்ள அத்துவிதத்தில் பிரமாணமன்று.

உரையும் (சத்தமும்) பிரவிர்த்திக்கு (முயற்சிக்கு)க் காரணமாயுள்ளதை (உவமையை) அவாவப்படுவதாம், மற்றும், வேற்றுமைகளையும் வேண்டி நிற்பதாம் ஆதலின் உவமை முதலிய தன்மைகள் ஒன்றுமின்றிய அத்துவிதத்தில் பிரமாணமன்று.

பொருளும் (அருத்தாபத்தியும்) எதிர்மறை (வியதிரேக) உடனிகழ்ச்சியைக் காரணமாக உள்ளதால், வேறுபாடிலாத அத்துவிதத்தில் பிரமாணமன்று.

அபாவமும் (இன்மை) பாவ வடிவப் பிரமேயத்தில் அதாவது அத்துவிதத்திற் பிரமாணமென்னும் ஆசங்கையே நிகழாதென்க.

இவ்வாற்றால் பிரமாணங்கள் முழுதும் குற்றமுடையன என்பது துவைதியின் கருத்தாம்.

துவைதி—அற்றேல், அத்துவிதத்திற்குள்ள பிரமாணங்களுட் சிலது குற்றமுடையதெனப்படுதலின், குற்றமற்ற பிரமாணம் யாது? என்பது எனது வினா என்பையேல்?

அத்துவிதி, இது குற்றமுடைய பிரமாணம், இதுவும் குற்றமுடையபிரமாணம் என்று எண்ணிப் போகுங்கால் யாண்டேனும் ஒன்றில் குற்றத்தைக் காணமாட்டாயேல், அச் சிறப்பின் கண்ணேயே பொது எனலும் தானாய் வந்து முடி தலின் பொருந்தாமை காண்க.

இதனால், அத்துவிதப் பிரமாணங்களுள் சிலவற்றை குற்றமுடையதாக விலக்கினும், குற்றம் புலப்படாத, அதாவது குற்றமற்ற அத்தகைய பொதுப்பிரமாணத்தில் ஆசங்கைவழி யாய்ச் சிறப்பு வகைகொண்ட பிரமாணமும் தானேவந்து சேர் தலின் சிறப்பைப்புற்றி வினாவிய தென்றதும் பொருத்தமற் றதே என்பது பெறப்பட்டமை காண்க.

துவைதி—எனதுவினா மேற்கூறிய பொருண்மேனிற் பதன்று, மற்றோ, அத்துவிதத்திற் கூறியுள்ள பிரமாணங் களுக்குரிய வியத்திகள் (வடிவுகள்) எவை ? என்னும் பொரு ளைமேற் கொண்டது, ஆதலின் குற்றங்காட்டல் யாங்ஙனம் ?

அத்துவிதி—அற்றேல் நின்கருத் தென்னை ? சிறப்பென் பது பெறப்படாமையின் பெறப்பட்ட (காணப்பட்ட)பொதுத் தன்மையையும் விட்டு விடுகின்றேன் என்பதாயின். அற் றன்று, ஏனெனின் ? காணப்பட்டதைத் தழுவிக்கொண்டே காணப்படாததைக் கைக்கொள்ளல் வேண்டுமாதலின். பிற வெனின் ? காரியத்தை இலிங்கமாகக் கொண்டு நிகழும் அநு மானம் யாண்டும் இல்லாதொழியு மென்க.

அத்துவிதி—காணப்பட்டதால், காணப்படாததைக் கற் பித்துக் கொள்ளுகின்றேன் , என்பையேல், இலக்கணவகை பற்றி அகண்டார்த்தத்தைப் போதிக்கின்ற தென்னும், உண் மையை யுணர்த்தும் அதுவே, மற்றொரு பிரமாணத்தையும் தேடிக்கொண்டு வருமாதலின், அதுதான் பொது எனல் வரும், ஆதலின் அதுவும் குற்றமற்ற தன்று.

இதனால், உலகிற்குக்காரணம் பரமாணு, என்பான் ஒரு வனை, அப்பரமாணுவில் பிரமாணம் யாது? என வினாவுமிடத்து, அநுமானமே அதில் பிரமாணமென்று கூறுவானேயலாது அவ்வநுமான வியத்தி இது வெனக்கூறான். என்னை? மக்களைக் குறித்து அநுமான வியத்தி வடிவுகள் எண்ணிறந்தனவாத லின் அவைகளிடத்துள்ள சிறப்பைச் சிற்றறிவினர் உணரார் கள் ஆதலின் என்க.

இதுவே பிரமாண வியத்தியைப்பற்றி வினாவிய நினது வினாவிற்கு விடையாமெனல் உணரற்பாலது என்பது கருத்து.

இது காறும் கூறியவாற்றால் துவைதிக்கு அத்துவித வுணர்ச்சி மெய்யாய் நிகழ்ந்த தென்னும் பக்கம் முழுதும் மறுக்கப்பட்டொழிந்தமை காண்க.

இனி.

துவைதி—அத்துவித வுணர்ச்சி மெய்யெனும் பட்சத் தில் எமக்கு வந்த குற்றம் சாலும். ஆதலின் அப்பக்கத்தை விடுத்து, எனக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சி பொய்த் தோற்ற மென்னில் வருங்குற்றம் யாது ? என்பையேல்,

அத்துவிதி,—நன்று நன்று, நினது அவலமதி, முன்னரா வது வினா பொருந்தா தெனப்பெறப்பட்டது. இப்போதோ, நினக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சி பொய்யுணர் வெனக் கொண்டு வினாவுதலின், எனக்குண்டாகிய பொய்யுணர்ச்சியின் விடயமாகிய அத்துவிதத்தில் பிரமாணம் யாது ? என்னும் நினது வினாவே முழுதுங் கேடுற்றது. என்னை ? பொய்யுணர்ச் சிக்கு விடயமாகிய பொருளில் பிரமாணம் வினாவப்பட்டதா லென்க. பொய்யுணர்ச்சிக்கு அதாவது திரிபுக்காட்சிக்கு விட யமாகியது பொய்ப்பொருளா மாதலின், அதனுணர்ச்சியும் குற்றமுடைய கருவியா லெழுந்ததாமாதலின் பிரமாணம் யாங்

ஙனம் பெறப்படும்? இதனால் நினது வினாவே வியாகாதமாம் (தன்னால் தானழிந்தது) என்பது கருத்து.

இதனால், எனக்குண்டாகிய பொய்யுணர்ச்சிக்கு விடயமானது பிரமாணியத்தன்மை (பிரமாணத்தாற் பெறப்பட்ட தன்மை) இன்றியது, என்று எனக்குத்துணிவிருக்குமென்பையேல், நீ, அதில் பிரமாணத்தை வினாதல் யாது பயக்கும்? வாளாயொழியும் என்பதும்,

அல்லது, அவ்வாறு துணியப்படவில்லையெனினும், எனக்குண்டாகிய அத்துவித நிகழ்ச்சி பொய்யே யெனப்படலால் வினாவே இல்லாதொழியும் பொய்யுணர்விற்குப் பிரமாணம் யாண்டும் அமையாமையின் என்பதும், கொள்ளக்கிடந்தமை காண்க. பாவம், அபாவம் என்னும் இரண்டும் ஓரிடத்திராதன வாதலி னென்க.

துவைதி—அற்றேலஃதாகுக. பொய்மை யுணர்ச்சிக்கு விடயமா யுள்ளதிற் பிரமாணத்தை வினாவிலன். மற்றோ, ஞானத்தின் விடயத்தில் மாத்திரம் பிரமாணத்தை வினாவுகின்றேன். அத்தகையஞானம், மெய்ஞ்ஞானமாகுக, அல்லது,பொய்ஞானமாகுக. அதாவது அத்துவித உணர்ச்சிக்கு விடயமாகிய அத்துவிதத்தில் பிரமாணம் யாது? என்பதே என்பது வினாவாம். இதில் வினாவே அமையாதென்றல் யாங்ஙனம்?

அத்துவிதி—அங்ஙன மாயினும், அத்துவித வுணர்ச்சி யெனப் பொதுப்படக் கூறினமையின், எனது அத்துவித வுணர்ச்சியும் கொள்ளப்படுமன்றோ, அற்றேல், எனக்குத் தோன்றிய அத்துவித வுணர்ச்சியின் விடயத்தில் நீ பிரமாணத்தை வினாவுவை யெனின்? இது நகைப்புக்கிடமன்றோ? ஏனெனின்? எனது உணர்ச்சியின் விடயத்தில் நீ பிரமாணத்தை வினாவுவையேல், நினக்கு இதனால் வரும் பயன் யாது?

இல்லை. வினாச்சொல், கேட்போனுடைய பயனையே முடிவாகக் கொண்டதா மாதலின் என்க.

துவைதி—அற்றேல், அஃதொழிக. எனக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சிக்கே பிரமாணத்தைக் கூறுவாயாக.

அத்துவிதி—அவைதிகத்துவைத வாதியே! உனக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சிக்குக் காரணத்தை மாத்திரம் யான் கூறல் வேண்டுமா? அல்லது பிரமாணத்தைக் கூறல் வேண்டுமா?

துவைதி—காரணத்தைக் கூறுவாயாக. அற்றேல், யாண்டாண்டு காரிய நிகழ்ச்சியோ, ஆண்டாண்டு ஒருகாரணமானது ஒருதலையாக இருத்தல் வேண்டும். அது போன்று நினது வுணர்ச்சிக்கும் யாதானு மொருகாரணம் உண்டென்பது நினக்குந் தெரியுமாதலின் என்னை வினாவுதலெற்றுக்கு?

துவைதி—அஃதுண்மை; அதில் பிரமாணத்தையேனும் கூறுவாயாக.

அத்துவிதி—நன்று நன்று நினது அறியாமை வியப்பு, எவ்வாற்றானே நினக்கு ஒரு அத்துவித வுணர்ச்சியுண்டாகுமேல் அதற்குப் பிரமாணம் இன்னதென்று யான் கூறுதல் வேண்டும்? என்னா இந்நியமம் யாண்டையது? வாய் மூடிக் கொண்டிருக்கில் அணியுறுவை.

மற்றும், நீ, உண்மை யுணர்வின் கரணம் பிரமாணம் என்பதை விடுத்து பொய்மை யுணர்வின் காரணத்தைப் பிரமாணமெனல் மிகமுரணாம் என்பதையும் உணர்வாயாக.

துவைதி—எனக்குண்டாகிய வுணர்ச்சியும் மெய்யுணர்வானாலன்றோ, அதன் விடயமும் மெய்ப்பொருளாகும். இன்றேல், நினது அத்துவிதமும் பொய்யா மெனல் வராதோ வெனின்?

அத்துவிதி—ஞானம் பிரமாணிய மின்றாமெனின், ஞானத்தால் உணரப்படும் ஞேயப்பொருளும் பொய்யாம்; என்னும் இந்நியமம் மிருதிக்கு விடயமாகிய பொருளில் பிறழக் காண்டலின் இதுவும் பொருந்தா தென்றுணருதி.

துவைதி—அற்றேல், விவாதத்திற் கிடமாகிய வுணர்வு, மெய்யுணர்வு, மிருதியின் வேறாய் மெய்ஞானமா மாதலின், நம்மிருவருக்கும் பெறப்பட்டுள்ள ஞானத்தைப்போலும், என்னும் அநுமானத்தால் ஞானவிடயமாகிய அத்துவிதத்தை யுறுதிப்படுத்துவேன்; பிறவெனின், உனக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சிக்கும், எனக்குண்டாகிய அத்துவித வுணர்ச்சிக்கும் விடயம் ஒன்றேயா மாதலின் இத்துணையே கொண்டு உனது அத்துவித வுணர்ச்சியையே பொய்த்தோற்றம் எனவும் நிறுவுவேன் எனின்?

அத்துவிதி—பலவகையாக விரிப்பதிலென்னை உண்மையை நோக்கிலோ, ஏதுப்போலிகளை, இவையென்றுணராதான் ஒருவன், தெய்வவசத்தால் தீயுடைய மலையையடைந்து அம்மலையின்மீது நீராவி யெழுவதைக்கண்டு கருதி, 'இம்மலை தீயுடைத்து' புகையுடைமையின், என்னும் அநுமான வளவை கொண்டு தீயை யுணர்கின்றா னன்றோ, ஆண்டு, நீராவியை, புகையென மயங்கி யுணர்ந்தானாதலின் அது திரிபுணர்ச்சி யென்பதில் ஐயமில்லை. ஆனாலும் அதனாலுண்டாகிய தீ யுணர்ச்சி மிருதியின் வேறாகிய மெய்யுணர்வா மாதலின் அதில் பிறழ்ந்த தென்பது நீயும் உடன் படற்பாலதாம் என்பது உட்கிடை.

இதனால், 'பிரமாண முதலியன சத்தியமானவைகளே' யென்று உடன் படுவார்க்கே பொருள்கள் சித்திக்கும்; வாதாடல் முதலான வழக்குகளும் கைகூடும் என்னும் நியதம் இன்றென்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

இதன் விரிவை, கண்டன கண்டகாத்திய மென்னும் நூலிற்காண்க.

துவைதியின் வினாவையுடன் பாடல்.

அத்துவிதி—மேல் அனைத்தும் மறுக்கப் படுமாதலின் ஈண்டொருவகையால் துவைதியின் வினாவை எடுத்துக்கொள்ளுகின்றேன். அஃதாமாறு காட்டுதும்—அத்துவிதத்தை விடயஞ்செய்யும் மெய்யுணர்விலேனும், பொய்யுணர்விலேனும், பிரமாணம் இல்லை. ஆனால் அத்துவித ஞானமாத்திரத்திற் பிரமாணம் உண்டு. 'உணர்வு' என்று பொய்யுணர்விற்கும் மெய்யுணர்விற்கும் பொதுப்படக் கூறியதை, சிறப்புவகையி லெடுத்துக்கொண்டு விகற்பித்து மறுக்கப்புகுவனேல் அநுமானம் என்பது முதலான வழக்குகளனைத்தும் அடியோடு ஒழியுமாதலின் நினது வினா ஒருவாற்றால் குற்றமற்ற வினாவாகுக. மற்றும், அத்துதத்தில் பிரமாணம் யாது? என்னும் இவ்வினா, அவ்வண்ணமே யாகுக.

அதற்கு விடையோ, அத்துவிதத்தில், பிரமாணம் சுருதியேயாம் எகின்றேன்.

துவைதி—அற்றேல், மற்றும் பல பிரமாணங்களும் இருக்க, ஈண்டுச் சுருதியை மாத்திரம் நீ பிரமாணம் என எடுத்துக்கொண்டது என்னை?

அத்துவிதி—ஏனைய பிரமாணங்க ளனைத்தும் துவைதத்தையே விடயஞ் செய்வனவேயாதலின், உன்னைப் போன்றவர்கட்கும், நினது கொள்கையாகிய அவைதிகக் கொள்கைக்கும், பிரமாணங்களே யலாது, எனுக்கும், எனது வைதிக மதக் கொள்கையாகிய அத்துவிதத்திலும் அவை பிரமாணங்களல்ல. இக்கருத்தையே தேற்றேகாரமுங் குறிக்கின்றது.

இதனால், காண்டல் முதலிய பிரமாணங்கள் துவைதத்திற் குரியன வென்பதும், மறைமுடிகளின் வாக்கியங்களே

அத்துவிதத்திற் பிரமாணங்களென்பதையும், யாவரும் உடன்படற்பாலாரேயாவர். இதை மறுப்பரேல், 'தொடக்கம்' முதலான, மகாப் பிரகரணத்தின் கருத்தை யுணர்த்துகின்ற அறுவகை இலிங்கங்களாற் பெறப்பட்ட கருத்தோடு அவர் கருத்து முரண்பட்டு இடருறு மென்பதுங் கொள்ளக் கிடந்தமை காண்க.

துவைதி — அற்றேல், அத்தகைய சுருதி யாதோவெனின்?

அத்துவிதி—சாங்தோக்கிய வுபநிடதம் 6-2-1-ல் உள்ள.

"ஏகமேவாத்விதீயம் பிரமம்" என்பதும்,

பிருகதாரணிய வுபநிடதம், 6-2-1-ல் உள்ள "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்பதும் பிறவுமாம்.

துவைதி—இச்சுருதிகளால் அத்துவித மென்பது பெறப்படாததுடன் துவிதமே பெறப்படும் என்பது நின்க்குப் புலப்படவில்லை போலும்?

அத்துவிதி—இரட்டை மதிகளைப்போன்று துவைதம் பெறப்படினும் பெறப்படுக. ஆனாலும் அஃதெவ்வண்ணமாம் தெரிக்குதி.

துவைதி—ஈண்டு 'ஏகம் ஏவ' என்னுஞ் சொல்லில் உள்ள ஏவ என்னும் தேற்றேகாரத்தால் விலக்கப்பெற்ற துவைதத்துடனும், 'நேஹநாநா' என்பதிலுள்ள, நாநா, என்பதாற் பெறப்பட்ட துவைதத்துடனும், மற்றும் இதுபோன்றே, "சதேவ சோம்யேதமக்ர ஆசீத்" என்பதிலுள்ள இதம்' என்னுஞ் சொல்லாற் பெறப்பட்ட துவைத்தோடும், மற்றும், "ததைக்ஷத நாமரூபே வியாகரவாணீ" என்பதிலுள்ள 'நாமரூபம்' என்பதாற் பெற்ற துவைதத்தோடும், மற்றும் பலவற்றுடனும் அத்துவிதமெனல்முரணுறுகின்றது.

அங்ஙனமே, "சதேவ சோம் யேதமக்ர ஆஸீத்" என்னும் வாக்கியத்தில் "சதேவ" என்பதாற் பெறப்பட்ட இது சத்தாதவே யிருந்தது என்னும் பொருளுக்கு மாறாக, சத்தாகவுள்ள வுலகை, மறித்தும் 'அத்துவிதம்' என்பதால் நீக்குதல் வியாகாதமுமாம். இவ்வாறே மற்றும் வருவனவற்றையும் உய்த்துணர்ந்து கொள்வாயாக.

அத்துவிதி—'ஏவ' என்பதாற் பெற்றதும், 'துவைதம்' என்பதால் குறிக்கப்பட்டதும், 'நாநா' என்பதால் கூறப்பட்டதும், "நாமரூபம்" என்பதால் சித்தித்ததுமாகிய உலகு. "மாயாமாத்திரமிதம் சகத்" என்றற் றொடக்கத்துச் சுருதி வாக்கியங்களால் மாயையின் காரியமானதால் மித்தையெனத் துணியப்பட்டிருத்தலின், வேடந்தாங்கிய மன்னன், வியனுலகையாளும் மன்னனுடன் பகைவனாகாததே போன்று, யாண்டும் நிலையாயுள்ள அத்துவிதத்தோடு பகையுற்றுக் கெடுக்க மாட்டாது.

மற்றும், "சதேவ ஆஸீத்" என்பதில் சத்தினின்றும் வேறாக உலகு என்பது என்று உண்மையாயில்லை எனும் பொருள் நிகழ்கின்றதேயன்றி, உலகு சத்தியமென்னும் பொருள் தோற்றவில்லை. தோற்றின் பல்லாயிரம் சுருதி வாக்கியங்களோடு பகைபட் டொழியு மென்க.

இதனால், துவைதியானவன் பல கோடிபேதங்களைக் கற்பிக்கினும், உலகை, சுருதி யுக்தி யநுபவங்களால் பொய்யெனக்கண்டு மெய்ப்போத வின்பக்கடலுள் மூழ்கியிருக்கும் எனக்கும் அத்துவிதத்திற்கும் சிறிதும் கேடில்லையென்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

துவைதி—மற்றும், ஏகம் என்னும் சொல்லும் நீ கொண்டவாறே அத்துவிதத்தை யறிவுறுத்தாது. எனெனின்?

"ஏகே முக்யாங்ய கேவலா" என்னும் அமரகோச வாக்கியத்தால், 'ஏகம்' என்பதன் பொருள் முக்யம், அங்யம், கேவலம் எனப்படுவனவன்றி அத்துவிதமாகிய ஒன்றெனல் காணப்படாமையின் என்க

அங்ஙனமே, பாணினி முனிவரின், "ஏகோ கோத்ரः" என்னுஞ் சூத்திரத்திற்கு உரைகண்ட பதஞ்சலி முனிவரும், கையடரும், ஏகம் என்னும் இச்சப்தம் அங்ய பிரதான அஸஹாய ஸங்க்யா பிரதம" என்னும் பொருள்களைத் தருவதாம், என்று கூறியுள்ளாராதலின், அத்துவிதப் பொருள் பெறப்படாது.

மற்றும், "ஷ்ணாந்தாஷட்" என்னும் பாணினி முனிவர் சூத்திரத்திற்குப் பாடி மியற்றிய பதஞ்சலிமா முனிவரும், ஏகம் என்னுஞ் சொல், பலபொருளைத் தருவதாம். அதாவது எண்ணென்னும் பொருளுமுண்டு, சகாயமென்னும் பொருளுமுண்டு, என்பனீ வாதியாகக் கூறிப்போந்தாராதலின் அத்துவிதம் என்னும் பொருள் பெறப்படாது.

மற்று எப்பொருள் கொள்ளற்பாற் றெனின்? சிவர்களினின்றும் பிரமம் வேறு, முக்கியம், அதாவது பிறருடைய சகாயத்தை வேண்டாதது என்பது போன்ற பொருளே கொள்ளற்பாலதாம். மாறு கொள்ளில் 'பாணினி முனிவர்' பதஞ்சலி முனிவர், கையடர் முதலியோர்களின் வாக்கியத்தோடு முரணுற்று இடர்ப்படும்.

அத்துவிதி—முன்னர்க் கூறியபடி எத்துணைத் துவைத பேதங்களைக் கற்பிக்கினும் அவைகளும், அவைகட்கு அநுகூலங்களான மாயை முதலானவைகளும், அத்துவிதீயமாயுள்ள எனது பிரமாத்திரத்தினுல் அடியோடு அழியும் என்பதையுணருதி.

அற்றாகலினன்றே, "ஞானத்தீயானது அடியோடு சாம்பராக்கும்" என்றருளினர்.

இப்பொருளையே கண்டன கண்டகாத்ய நூலாசிரியரும்,

பிரம மென்னும் பெரும்படை தாங்கி
அரவ மயலை யணுவு மிங்கெண்ணு
தெதிர்க்கும் வீரனுக் கென்றுங்கேடு
வுதித்தபோர் விளையாட்டி னுண்டோ? என்று கூறியுள்ளார்.

இதையே,

நயந்த சாத்திர நரிகளின் ஊளை
பயந்த வேதம் பனுமுடி யரிமா
இயைந்து பேரொளி யெழும் வரையாமே, என்று கூறியுள்ளார் சான்றோரும்.

துவைதி—நீ வெருட்டுதல் ஒருபுற மிருக்கட்டும், உன்னாலும், சுருதியாலும் சிறப்பாயெடுத்துக்கூறப்பெற்ற 'அத்துவிதம்' என்னும் பதமே துவிதத்தை யறிவுறுத்து மெனின் பிறவகை எற்றுக்கு?

அத்துவிதி—அற்றேல் அதைத்தெரிக்குதி நோக்குவம்.

துவைதி—ஆம், ந - துவைதம், அத்துவிதம் எனப்படலால், இரண்டாவது இல்லை, மற்றோ மூன்றாவது, அல்லது, முதலாவதாம் எனக்கொள்ளக்கிடத்தலின், துவைதம் வெளிப்படையன்றோ?

அத்துவிதி—அவ்விரண்டும் யாதானும் ஒன்றைக் குறித்தே நிகழ்வனவேயாதலின் விரோத மின்மை காண்க.

துவைதி—அற்றேல் ஒன்றையும் அவாவாது அத்துவிதத்தை யறிவுறுத்தல் என்பது எவ்வாறும்?

அத்துவிதி—துவைதம் யாண்டு இல்லையோ, அது அத்துவிதம் என அன்மொழித்தொகையை(பகுவிரீகி சமாசத்தை)க் கொள்ளில் அத்துவிதமே எளிதிற் போதரும்.

துவைதி—அற்றேல் தனது பொருளையே முக்கியமாய்க் கொள்ளும் வேற்றுமைத் தொகையைக் கொள்ளாது வேற்றுப் பொருளையே முக்கியமாய்க் கொள்ளும் அன்மொழித் தொகையைக் கொள்ளில் அத்துவிதமானது அத்துவிதமென்னுஞ் சொல்லாற் போதிக்கப்பட்டதன்று என்பதும் வருமன்றோ ?

அத்துவிதி—அங்ஙனமாயினும், பொற்றொடி என்புழி, பொன்னாலாகிய தொடியை யுடையாள் எனவிரித்து மகளையும் அன்மொழித் தொகைச்சொல்லின் பொருளாகவே வழங்குவது போன்று, அத்துவிதமானது அத்துவிதம் என்னுஞ் சொல்லின் பொருளாமென வழங்குவதில் தடையாது ?

துவைதி—அற்றேல், அத்துவிதம் வாக்கு மனங்கட்கெட்டாதது என்று முழங்கிவிட்டு இப்போது வாக்கினாற் சொல்லப்பட்டதென்பது முரண்படாதோ ?

அத்துவிதி—அற்றன்று, அத்துவிதம் என்பது விலக்கு வாசகமாதலின், நீ துவைதம் என்று நிறுவுதலை மறுக்கவந்ததே அத்துவிதம் என்னுஞ் சொல், அஃதன்றி நிறுவ வந்த சொல்லன்று. நான் நிறுவற்பாலது ஒன்று மில்லையென முன்னருங் கூறியுள்ளேன் அதையும் நினைக்குதி.

இதனால், "தத்துவமசி" மகாவாக்கியம் நேரே அபேதத்தைக் கூறாமையின் அபேதம் கூறப்படவில்லை யென்றும், அபேதம் அவைதிகமென்றும் துவைதி வாய்ப்பறை யடிப்பது மறுக்கப்பட்டமை காண்க. என்னை? சுருதியிற்கூறும் வாக்கியங்கட்குக் கருத்தாகப் பொருள்கொள்ளலே வைதிகப் பொருளாம். இன்றெனின் 'அன்னமயமான்மா' என்றற்றொடக்

கத்து வாக்கியங்களால் தேகமே ஆன்மா என்பது முதலானவைகளும் கொள்ளற்பாலனவாகி நீ உலகாயதனாய் ஒழிவை என்பதை முன்னருங் கூறியுள்ளேம்.

துவைதி—"ஏகமேவா த்விதீயம்" என்பதில் அத்துவிதம் என்னும் சொல்லே மூவகைப்பேதங்களையும் விலக்கலின் மற்றிரண்டு சொற்களும் பயனற்றனவலவோ ?

அத்துவிதி—ஏகம், ஏவ என்னும் இரண்டு சொற்களுக்கருகில் 'அத்துவிதம்' என்னும் சொல்லிருத்தலின், அது விஜாதீய பேதத்தை மாத்திரம் விலக்குவது என்று கொள்ளற்பாலதாம். ஈண்டு விஜாதீய பேதம், குண முதலியவற்றின் பேதமாம், இவ்வாற்றால் ஏனைய இரண்டு சொற்களும் ஏனைய இரண்டு பேதங்களையும் விலக்கலின் பயனுடையனவா மென்க.

அல்லது, சடபேதம் விஜாதிய பேதம், சைதன்ய பேதம், சஜாதீய பேதம், ஞானம் அனந்தம் என்பது முதலாயின சுவகத பேதமாம்,

இதனால், "அஸ்ய கோ த்விதீயோ அந்வேஷ்டவ்யঃ" என்பதில் சஜாதீயமாகிய பசுவே தேடற்பாலதாமன்றி, குதிரை, கழுதைகளல்ல, என்னும் வடமொழி வியாகரண மாபாடிய வாக்கின்படி ஈண்டு அத்துவிதம் என்னுஞ்சொல் விஜாயதீய பேதத்தை மாத்திரம் விலக்குவதாம் என்பது கருத்து,

ஆராய்ந்து நோக்கில் ஏகம், ஏவ, என்னும் இரண்டுபதங்களும் கருத்துதைக் குறிப்பிடுவனவாம்.

மற்றும், மகாவாக்கியத்தில் இலக்கணை கொள்ளுதல் குற்றமென்பதும், ஒருசம்பந்தமு மற்றதும் ஒருதன்மையிலாததுமாகிய அப்பிரமேயப் பொருளை, மகாவாக்கியம் இலக்கணையால் அறிவுறுத்துகின்றதென்பதும், நின்னைப் போன்ற அறியாமை யுடையார்க்குக் காட்டிய வழியாம்.

உண்மையில் தத்துவமசி மகாவாக்கியம் அபேதப் பொருளை யறிவுறுத்துதல், மனத்தூய்மையையே சிறந்த காரணமாய்க் கொண்டதால் என்பதை வார்த்திகத்தில் விரிவாய்க் கண்டுகொள்க.

அஃதன்றியும், தத்துவமசிவாக்கியம், இலக்கியமான சுத்தப் பொருள்கட்கு அபேதங்கூற எழுந்ததேயன்றி, முக்கியப் பொருள்களான அசுத்தப் பொருள்களுக்கு அபேதங் கூற எழுந்ததல்ல.

மற்றும் உற்றுநோக்கில் உன்னைப்போன்ற பேதமதியுடையாரை நோக்கி அபேதத்தை யுணர்த்தவந்ததேயன்றி அபேதத்தை யுண்டுபண்ணவந்த வாக்சியமுமன்று. இதையே சித்தார்த்தபோதக வாக்கியமென்பர் நூலாசிரியர்.

'அற்றாகலி னன்றே'

கன்னனை வேடுகழித்து மகன் குந்திக்கெனவும், 'அதாவது கர்ணனை வேட்டுவன் மகன் என்னும் அறியாமையை நீக்கி, நீ குந்திமகன் என்பது, முன்னர்ச் சித்தித்துள்ளதையே உணர்த்துகின்றதன்றி புதி தன்று, இவ்வாறே பிறவற்றையுங் காண்க.

அங்ஙனமே, ஞானத்தால் அறியாமை யகற்றுதலும், கண்ணபிரானால் கொல்லப்பட்ட சைன்யமே அருச்சுனனாற் கொல்லப்பட்ட தொப்ப, சைதன்ய வடிவால், இரவி போன்று அறியாமை முழுதும் அகன்றிருக்க, ஞானத்தால் அகன்றதென்னும் வழக்கு உபசார மென்க, விரிக்கிற் பெருகும்.

இதனால், அஞ்ஞான காலத்தில், சில மறைமுடி மொழிகள் உபலக்கணவகையால் அத்துவிதத்தை யுணர்த்தினமையானே பிரமாண மெனப்படல் நூல் வழக்கென்றுணர்க,

அத்துவிதி முடிவுரை—துவைதியே நீ, வேதத்தின் முற்பகுதியாகிய கருமகாண்டத்தை வகுத்தோதப்புகுந்த சைமினிமுனிவர், கருமத்தையே மகாப்பிரகரணமாய் எடுத்துக்கொண்டு அதைப் பல்லாற்றானும் வேதக்கருத்தென நிறுவுதற்கு, சுருதி, இலிங்கம், வாக்கியம், பிரகரணம், ஸ்தானம், சமாக்ளை, என அறுவகைப் பிரமாணங்களை யெடுத்துக் கொண்டு இடைப்பட்ட சிறுபிரகரண வாக்கியங்கட்கும் கருமமே கருத்தென நிறுவியது போன்று,

உபநிடதங்களுக்கும், அத்துவிதப் பிரகரணமே மகாப் பிரகரணமாகக்கொண்டு இடைப்பட்டவைகளும் அநுகூலமுடையவைகளுமான சில பிரகரண வாக்கியங்களையும், உபக்கிரமம், உபசம்மாரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், என்னும் அறுவகை இலிங்கங்களென்னும் பிரமாணங்களைக் கொண்டு அவையும் அத்துவிதத்திலே கருத்துடையனவென்று, பெரியாரினும் பெரியாரும், பழையாரினும் பழையாருமாகிய சங்கராசாரியர் நிறுவியுள்ளார். அதைத் தழுவி, உபநிடதங்கட்கும், கீதைக்கும், சூத்திரத்திற்கும் அத்துவிதமே மகாப்பிரகரணத்தாற் பெறப்பட்ட பொருளெனக் கோடலே வைதிகமும். சுருதி யுக்தி அநுபவங்கட்கும் ஒத்ததுமாம். இதுவே சத்தியம் இதுவே பிறப்பையறுத்து முத்தியை யளிப்பதும் மீண்டும் பிறவாமல் நிலைப்பதுமா.

அவைதிகத்துவைதியே! நீ இத்தகைய அத்துவிதமதியை, கேவலம் தருக்கத்தால் தள்ளிவிடாது கைக்கொண்டு உய்வாயாக.

இக் கருத்துக்கொண்டே சுருதியும் 'இம்மதி தருக்கத்தால் தள்ளற்பாலதன்று' என்று ஆணையளிக்கின்றது.

இவ்வாற்றால், பொற்பணிபோல் அபேதத்தையும், இருள் வெளிபோற் பேதத்தையும், சொற்பொருள்போல் பேதா

பேதத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்கும் சுத்தாத்வைதமும் இதுவே யென்பது பெறப்பட்டமை காண்க. இதுவே வாக்குமனதிற்கு எட்டாததெனவும் படுகின்றது.

அத்துவிதத்தீர்ப்பின் சாரம்

சீகண்ட மதப்பிரதிட்டபகரின் பாடிய சுலோகம்.

यद्यप्यद्वैत एव श्रुतिशिखरगिरा मागमानाञ्चनिष्ठा
साकं चेतिहास महाभारतादि प्रबन्धैः ॥

तत्रैव सूत्राण्यपि विमर्शतां यान्ति विश्रान्ति मन्तिच
तदेव प्रत्नैः आचार्यरत्नैपि जगृहुः शङ्कर प्रभृतिभिः ॥

கருத்து—மறைமுடிகளின் வாக்கியங்களும், ஆகமங்களும், அத்துவிதத்தின் கண்ணேயே நிலைக்கின்றன. இதிகாசத்தோடுகூட புராணங்களும் அத்துவிதத்திலேயே முடிவுறுகின்றன. அத்துவிதத்திலேயே சூத்திர முதலானவைகளும் முடிவுறுகின்றன. இதையே சங்கராசாரியர் முதலான மிகப் பழைய ஆசிரியரத்தினர்களுங் கைக்கொண்டனர்.

அத்துவிதத் தீர்ப்பு முற்றிற்று.